# ஆவடியில் மோடி அரசைக் கண்டித்து நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை கேட்க அலை கடலெனத் திரண்ட மக்கள் பாரீர்!



## ஒன்றிய அரசு தனது மனப்பான்மையை மாற்றிக் கொள்ளாவிடில், மக்கள் மன்றத்தில் நாளுக்கு நாள் மரியாதையை இழக்கும்!

# ஒன்றிய ஆட்சியாளர்களே - வஞ்சிப்பது உங்கள் வழக்கம்! வாழவைப்பது எங்கள் பழக்கம்!

## தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசைக் கண்டித்து – ஆவடியில் நடைபெற்ற பிரம்மாண்டப் பொதுக்கூட்டத்தில் – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!

**திருவள்ளூர்,பிப்.9–**

**“ஒன்றிய ஆட்சியாளர்களே... வஞ்சிப்பது உங்கள் வழக்கம்... வாழ வைப்பதும், வளர்த்தெடுப்பதும் எங்களின் பழக்கம்” என்றும் “ஒன்றிய அரசு தன்னுடைய மனப்பான்மையை மாற்றிக் கொள்ளவில்லை என்றால், மக்கள் மன்றத்தில் நாளுக்கு நாள் மரியாதையை இழக்கும்!” என்றும் – கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (08-02-2025) திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் நடைபெற்ற ‘தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிரான’ மாபெரும் கண்டனப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

**கழகத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

இந்தக் கூட்டத்தைத் தொடங்கும் முன்பு, ஒரு மகிழ்ச்சியான செய்தியை உங்களோடு நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். பெரியார் மண்ணில் நாம் பெரு வெற்றி பெற்றுவிட்டோம். ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத் தேர்தலில், கழகத்தை எதிர்த்துப் போட்டியிட்ட அத்தனை பேரும் டெபாசிட் இழந்திருக்கிறார்கள் என்ற வெற்றிச் செய்தியை, இந்தக் கூட்டத்தின் வாயிலாக உங்களிடம் தெரிவித்துக் கொள்கிறேன்.

### வேதனையான மனநிலையில் நாம் நடத்தும் கண்டனக் கூட்டம்!

தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசிற்கு எதிராக, இன்றைக்குத் தமிழ்நாடு முழுவதும் நாம் கண்டனப் பொதுக்கூட்டம் நடத்திக் கொண்டிருக்கிறோம்! நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொல்வதைவிட, நடத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம் என்றுதான் சொல்ல வேண்டும்! மிகவும் வேதனையான மனநிலையோடு இந்தக் கூட்டத்தை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்!

### திருத்தணியை அன்றைக்குக் காத்தவர்கள் நாம்!

தொண்டை மண்டலத்தின் நுழைவு வாயிலாக – ஜார்ஜ் கோட்டைக்கு வழித்தடம் அமைத்த மாவட்டமாக விளங்கும் இந்தத் திருவள்ளூர் மாவட்டமும், தமிழ்நாட்டு உரிமைகளுக்கான போராட்டமும் பிரிக்க முடியாத ஒன்று! மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது நடந்த எல்லைப் போராட்டத்தில் இந்த மாவட்டத்துக்கு முக்கியப் பங்குண்டு!

“திருத்தணி தமிழ்நாட்டுக்குதான் சொந்தம்” என்று ம.பொ.சி. அவர்கள் தலைமையில் நடந்த போராட்டத்தில் நாமும் இணைந்து போராடுவோம்! என்று சித்தூர் திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில், “திருத்தணி தமிழ்நாட்டுக்குத்தான் சொந்தம்” என்றுதீர்மானம்நிறைவேற்றியதோடு, வட ஆர்க்காடு மாவட்டத்தில் இருப்பவர்களையும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள வைத்தார் பேறறிஞர் அண்ணா! அதுமட்டுமல்ல, அந்தப் போராட்டத்தை முன்னெடுத்த ம.பொ.சி அவர்களை, அன்றைய பிரதமர் நேரு அவர்கள் கடுமையாக விமர்சித்தார் என்று தமிழ்நாடு முழுவதும் ரயில் மறியல் அறிவித்தார் பேரறிஞர் அண்ணா!

திருத்தணியைக் காக்க தமிழ்நாடு முழுவதும் ரயில் மறியல் போர் நடத்தி கைதான இயக்கம்தான் நம்முடைய இயக்கம்! அப்போது பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்ட அனைவரும் சிறை வைக்கப்பட்டதால், கழகத்தின் பொறுப்பாளராக மதிப்பிற்குரிய ஏ.ஜி. அவர்களை நியமித்தார் அண்ணா! நம்முடைய போராட்டத்தைக் கட்டுப்படுத்த தமிழ்நாடு முழுவதும் 17 இடங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அதில் நான்கு தொண்டர்கள் மரணம் அடைந்தார்கள்! இவ்வாறு திருத்தணியை அன்றைக்குக் காத்தோம்! இன்றைக்குத் தமிழ்நாட்டின் உரிமைக்குக் குரல் கொடுக்க ஒன்று கூடியிருக்கிறோம்!

### எப்போதும் பரபரப்போடும் - துடிப்போடும் செயல்படுபவர் நாசர்!

இந்தப் பொதுக்கூட்டத்தை மிகப் பிரமாண்டமாகவும் – எழுச்சியோடும் ஏற்பாடு செய்திருக்கும் நாசர் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன்! இளைஞரணி உருவான காலத்தில் இருந்து, என்னோடு தோள் கொடுத்து நிற்கும் தோழன்தான் நாசர் அவர்கள்! இன்றைக்குத் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு ஊரிலும் கழகக் கொடி கம்பீரமாகப் பறக்கிறதே, அதை ஏற்றி வைக்க நான் கிராமம் கிராமமாகச் சென்றபோது, என்னுடன் இருந்தவர் நம்முடைய அருமை நண்பர் நாசர் அவர்கள்! அன்றைக்கு எப்படிப் பார்த்தேனோ, அதே துடிப்போடும் – பரபரப்போடும் இன்றைக்கும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்! அவருக்குப் பக்கபலமாகத் துணை நிற்கும் சந்திரன் உள்ளிட்ட திருவள்ளூர் மாவட்டக் கழகங்களின் நிர்வாகிகளுக்கும் – முன்னணியினர் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகள்! வாழ்த்துகள்! நன்றிகள்! உங்களுடைய ஆதரவால் – உழைப்பால் உருவானதுதான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி! அதற்கு நான் என்றென்றும் நன்றியுடையவனாக இருப்பேன்!

தொடர்ச்சி 3– ஆம் பக்கம்



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.2.2025) திருவள்ளூர் மாவட்டம், ஆவடியில் கழகத்தின் சார்பில் நடைபெற்ற தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிரான கண்டனப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சரும், திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ். சந்திரன் எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினரும், சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி. ராஜேந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக் குழுச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஆ. கிருஷ்ணசாமி, ஆவடி மாநகராட்சி மேயர் ஜி. உதயகுமார், ஆவடி மாநகர பொறுப்பாளர் சண். பிரகாஷ், ஆவடி வடக்கு பகுதி செயலாளர் ஜி. நாராயண பிரசாத், திருவள்ளூர் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



### இளைஞர் அணி உருவான காலத்தில் இருந்து என்னோடு தோள் கொடுத்து நிற்கும் தோழன்தான் நாசர்!

**இந்தப் பொதுக்கூட்டத்தை மிகப் பிரமாண்டமாகவும் – எழுச்சியோடும் ஏற்பாடு செய்திருக்கும் நாசர் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன்! இளைஞரணி உருவான காலத்தில் இருந்து, என்னோடு தோள் கொடுத்து நிற்கும் தோழன்தான் நாசர் அவர்கள்! இன்றைக்குத் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு ஊரிலும் கழகக் கொடி கம்பீரமாகப் பறக்கிறதே, அதை ஏற்றி வைக்க நான் கிராமம் கிராமமாகச் சென்றபோது, என்னுடன் இருந்தவர் நம்முடைய அருமை நண்பர் நாசர் அவர்கள்! அன்றைக்கு எப்படிப் பார்த்தேனோ, அதே துடிப்போடும் – பரபரப்போடும் இன்றைக்கும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்! அவருக்குப் பக்கபலமாகத் துணை நிற்கும் சந்திரன் உள்ளிட்ட திருவள்ளூர் மாவட்டக் கழகங்களின் நிர்வாகிகளுக்கும் – முன்னணியினர் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகள்! வாழ்த்துகள்! நன்றிகள்! உங்களுடைய ஆதரவால் – உழைப்பால் உருவானதுதான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி! அதற்கு நான் என்றென்றும் நன்றியுடையவனாக இருப்பேன்!**